# வனஜீவராசிகள் பாதுகாப்பு நிதியம் - 2012

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வனஜீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) நடைபெறும் கட்டிட வேலையினது 17 வேலை விடயங்களுக்கான மொத்தச் செலவினம் ரூபா 55,895,662 ஆகும். இது நடைபெறும் வேலையாகக் காட்டப்படாது நிலையான சொத்தாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 43,526,689 க்கு யானைகளை விரட்டுவதற்கான வெடிப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தலைமை அலுவலக பொருட் பட்டோலைப் பதிவேட்டின் பிரகாரம் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 31,250 கூறுகள் எஞ்சியிருந்தன. அவற்றை பௌதீக ரீதியாக பிழை பார்த்து பெறுமதியைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கையிருப்பு பௌதீகரீதியில் கணிப்பீடு செய்யப்படவில்லை. பால்மா கையிருப்பும் மருந்துப் பொருள் கையிருப்பும் முறையே ரூபா 1,490,411 மற்றும் ரூபா 11,218,465 என புத்தகப் பெறுமதியில் கணக்கீட்டுக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) பெறப்பட்ட வருமானமாகிய ரூபா 1,385,646 கணக்கிலிடப்படாமையால் மீளாய்வாண்டினது வருவாய் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஆண்டிற்கான உள்ளபடியான மிகையூதியத் தொகையை, அதாவது, கொடுப்பனவுக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை என்பவற்றைச் சரிவர இனங்கண்டு அதனைக் கணக்கிலிடுவதற்குப் பதிலாக ஆண்டிற்கான தண்டப் பணமாகிய ரூபா 24,090,000 இன் 60 சதவீதமாகிய ரூபா 14,454,000 மிகையூதியக் கொடுப்பனவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டினது பெறுவனவு, கொடுப்பனவுக் கணக்கு மீதி ரூபா 1,115,525,248 ஆகும். திறைசேரிக் கணக்குப் பொழிப்பின் பிரகாரம் அது ரூபா 1,113,817,176 ஆகும். வேறுபாட்டிற்கான காரணத்தை இனங்காணாதும் முறையான அங்கீகாரம் இன்றியும் இது சீராக்கல் கணக்கு ஒன்றின் மூலம் திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

ஓராண்டிற்கு மேல் பழமை வாய்ந்த ரூபா 16,045,658 கூட்டுத்தொகையுடைய 09 மீதிகளும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மிகையூதிய மீதியாகிய ரூபா 25,900,809 என்பனவும் காணப்பட்டதுடன் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த சேவைக் கட்டண மீதி ரூபா 3,255,318 ஆகவுமிருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|
| | **ரூபா** | |
| 2012 ஆம் ஆண்டில் நிதியம் கொள்வனவு செய்த 10 வாகனங்கள் | 27,479,592 | காப்புறுதிச் சான்றிதழ் |
| நீதிமன்றத் தண்டப் பணம் | 2,784,517 | விரிவான பட்டோலை |
| அட்டுறு செலவினம் | 15,745,392 | விரிவான பட்டோலை |
| மிகையூதியம் | 25,900,392 | விரிவான பட்டோலை |

(ஆ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் சுடுகலன்கள், துப்பாக்கிக் குண்டுகள், யானைகளை விரட்டுவதற்கான வெடிப் பொருட்கள் என்பன தொடர்பான பட்டோலைப் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அவ்வாறே, பிரதேச அலுவலகங்களிலும் குறித்த சொத்துக்கள் தொடர்பான பட்டோலைப் பொருள் பதிவேடு பேணப்படாததால் வைத்திருக்க வேண்டிய துப்பாக்கிகளது எண்ணிக்கைமைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியாதிருந்தது. மேலும், இதற்கு முன்னர் இருந்த உத்தியோகத்தர்களும் தமது பொறுப்பில் உள்ள சொத்துக்களை எழுத்து மூலம் ஒப்படைக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) 2009 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தஞ் செய்யப்பட்ட 1937 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வனவிலங்குகள் மற்றும் விருட்சங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 06(1) (ஏ) பிரிவு | ஏதேனும் ஒரு வீதியை நிர்மாணிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும், வில்பத்து தேசிய பூங்காவினுள்ளே சட்டவிரோதமாக இலவங்குளம் கலா ஓயாவிலிருந்து கொண்டச்சிக் குடா வரை ஏறக்குறைய 55 கிலோ மீட்டர் தூரத்திற்குப் புதிய பாதை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |

(ஆ) நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 104 | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட டபள்கெப் வாகனம் விபத்திற்குள்ளாகியது. இதனைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 102,600 செலவிடப்பட்டிருந்தது. காப்புறுதி செய்யப்படாமையால் செலவை மீளளிப்பாகப் பெறமுடியவில்லை. இழப்பிற்குப் பொறுப்பானவரிடமிருந்து அதனை அறவிடுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ii) | நி.பி 177 | பெறப்பட்ட பணம் அத் தினத்திலோ அல்லது அதனையடுத்து வரும் தினத்திலோ வைப்பிலிடப்பட வேண்டுமாயினும், 2 முதல் 11 நாட்கள் வரையான தாமதம் நிலவியது. |
| (iii) | நி.பி 755 | உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்குள்ளாகும்போது, 5 சுற்றுலா விடுதிகளிலும் இருந்தவர்களின் பொருட்கள் ஒப்படைக்கப்படுதல், அவற்றைப் பொறுப்பேற்றல் என்பன நடைபெறவில்லை. பொருட் குறைவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iv) | நி.பி 756,757 என்பன | மன்னம்பிட்டி பிட்டு அலுவலகம் மற்றும் நவ புதவ சுற்றுலா விடுதியில் உள்ள சொத்துக்களும் கையிருப்பும் பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 442,202,868 மிகையாக அமைந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 509,253,575 ஆகும். இதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 67,050,707 நலிவு காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பூங்காக் கட்டணம் ரூபா 62.46 மில்லியனால் குறைவடைந்தமையே இதற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதியத்தின் 2011 ஆம் ஆண்டினது வருமானம் ரூபா 724.8 மில்லியன் ஆகும். அது 2012 ஆம் ஆண்டில் ரூபா 733.4 மில்லியன் வரை ரூபா 8.6 மில்லியன் அல்லது 1.19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2011 ஆம் ஆண்டின் செலவினம் ரூபா 215.58 மில்லியனாகும். இது 2012 ஆம் ஆண்டில் ரூபா 291.17 மில்லியன் வரை 35 சதவீதத்தால் ரூபா 75.59 மில்லியன் அதிகரிப்பிற்குள்ளாகியிருந்தது.

### 2.3 நிறுவனத்தால் அல்லது நிறுவனத்திற்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின்போது வெளி நிறுவனங்கள் மற்றும் நபர்களால் திணைக்களத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 14 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. தலைமை அலுவலகத்தின் திடீர் சுற்றிவளைப்புக் கூறினால் 2012 ஜனவரி முதல் ஆகஸ்ட் 31 வரை வெளி நபர்களுக்குகெதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 601 ஆகும்.

### 2.4 செலவினத்தில் அசாதாரண அதிகரிப்பு

மீளாய்வாண்டின்போது 08 செலவின விடயங்களில் 21 முதல் 100 சதவீதமாக ரூபா 114.12 மில்லியன் தொடக்கம் ரூபா 225.20 மில்லியன் வரை அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. வீதி வழிகாட்டித் தொண்டர்களுக்கு ரூபா 44.58 மில்லியன் படியாக வழங்கப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டைவிட 41 சதவீதம் கூடியதாகும். எவ்வாறாயினும், ஆண்டிற்கான பூங்காக் கட்டணம் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேசத்தில் 3 தேசிய பூங்காக்கள், 11 வன அலுவலகங்கள், 12 பீட்டு அலுவலகங்கள், என்பன நிறுவப்பட்டுள்ளபோதும், பூங்காவினுள்ளே வெளி நபர்கள் 56 இடங்களில் கஞ்சா செடிகளைப் பயிரிட்டிருந்தனர்.

(ஆ) கிழக்கு வலயத்தின் ஹேனானிகல பீட்டு அலுவலகத்தின் நிலையப் பொறுப்பதிகாரி சேவை நிலையத்தில் இல்லாதிருந்தமை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலாப் பயணிகள் உள்ளே நுழையும்போதும் வெளிச் செல்லும்போதும் வெளிநாட்டு, உள்ளூர் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டு இலக்கங்கள் எவை எனவும் குறித்துக் கொள்ளப்படாமையாலும் அவை இரத்துச் செய்யப்படாமையாலும் அதனைப் பிரதீயீடு செய்யவோ அல்லது தவறாகப் பயன்படுத்தப்படவோ இயலும் எனத் தோன்றியது.

(ஆ) கணணியில் நிலவும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமையால் முன்னரே வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு இலக்கம் மற்றும் பணத்தொகை என்பன மீண்டும் அச்சிடப்பட்டிருந்தன. இதற்கமைய, கணணி மூலம் அனுமதிச்சீட்டு வழங்கப்பட்ட போதும், அது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு நலிவுற்ற நிலைமையிலேயே இருந்தது.

(இ) உடவளவை தேசிய பூங்காவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் சம்பந்தமாக தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்படும் வருமான அறிக்கைகளில் நாளாந்த வருமான அறிக்கை சரியாக இல்லாததும் நாளாந்த வருமான அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட சுற்றுலாப் பயணிகளது எண்ணிக்கை சரியாக அமையாததும் தொடர்பாகப் பரீசீலித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) உடலனவை தேசிய பூங்காவில் 35 தொண்டர்கள் சேவையாற்றியவாறு இருந்தனர். எனினும், செக்ரோல் பேணப்படவில்லை. நாளாந்தம் ஒப்படைக்கப்படும் வேலைக்கான பதிவேடும் பேணப்படவில்லை. இதற்கமைய அவ்வூழியர்கள் கடமைக்குச் சமூகமாகி தமக்குரிய வேலை இடங்களில் பணியாற்றினரா என்பதை உறுதி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(உ) உடவளவையில் உள்ள எத் அதுறு செலனவில் ரூபா 58,000 பெறுமதியான 16 புத்தகங்கள் தொலைந்து போனமை தொடர்பாகப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) உடவளவை தேசிய பூங்காவிற்கு 2011 ஜூலை 13 அன்று வழங்கப்பட்ட 10 பொது 172 அடியிதழ் சேர் புத்தகங்களும் 2012 மார்ச் 01 அன்று வழங்கப்பட்ட 03 அடியிதழ் சேர் புத்தகங்களும் தொலைந்து போயின. மேலும் 2011 பெப்ரவரி 13 அன்று தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பயன்படுத்தப்படாத 12 அடியிதழ் சேர் புத்தகங்கள் பூங்கா அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தமை 2013 ஜனவரி 22 ஆந் திகதிய பௌதீகப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது. அடியிதழ் சேர் புத்தகங்கள் தொடர்பான நலிவுற்ற உள்ளகக் கட்டுப்பாட்டு தொடர்பாக முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(எ) வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தொலைநோக்கு “ தற்போதைய மற்றும் எதிர்காலப் பரம்பரைக்கு வனவிலங்கு மரபுரிமையை பாதுகாத்தல்” எனத் தெரிவிக்கப்பட்டபோதும், யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையே ஏற்படும் சச்சரவுகளால் இறக்கும் யானைகளின் எண்ணிக்கை 2007 முதல் 2012 வரை துரிதமாக அதிகரித்திருந்தன. இந் நிலைமையைக் குறைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை. வனவிலங்குத் திணைக்களம் வழங்கிய புள்ளிவிபரங்களின்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்பட்ட யானைகளது இறப்பு எண்ணிக்கை பின்வருமாறு.

| **ஆண்டு** | **யானைகளது இறப்பு எண்ணிக்கை** |
|---|---|
| 2007 | 189 |
| 2008 | 224 |
| 2009 | 228 |
| 2010 | 227 |
| 2011 | 255 |
| 2012 | 250 |

(ஏ) யானைகள் பாதுகாப்புப் பிரிவின் 8 பிரதான பணிகள் மற்றும் பொறுப்புகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபோதும், காட்டு யானைகளுக்கு வழிகாட்டும் பாதுகாப்புப் பிரதேசங்களை உருவாக்குதல், தேசிய யானைகள் கொள்கையை அமுலாக்கல் போன்ற பிரதான பணிகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. யானைகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அவற்றை விரட்டியடித்தல், ஒழித்தல் வனவிலங்குகளால் ஏற்படும் இழப்புகளுக்கு நட்ட ஈடு வழங்கல், யானைகளை விரட்டுவதற்கு வெடிப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், கஜமிதுரோ எனும் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையேயான சச்சரவுகளைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்குதல் மற்றும் மின்சார வேலி அமைத்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றிக்குப் பின்வருமாறு செலவிடப்பட்டிருந்தது.

| **விபரம்** | **ஆண்டு** | |
|---|---|---|
| | **2011 ரூபா.மில்லி** | **2012 ரூபா.மில்லி** |
| யானைகளை விரட்டியடித்தலுக்கான செலவினம் | 0.36 | 5.95 |
| பொதுமக்களுக்கு விலங்குகளால் ஏற்படும் இழப்புகளிற்கு இழப்பீடு | 25.18 (1348 சம்பவங்கள்) | 15.90 (3183 சம்பவங்கள்) |
| யானைகளை விரட்டுவதற்கு வெடி பொருட்களைக் கொள்வனவு செய்தல் | 41.14 (கொள்வனவு செய்யப்பட்ட வெடி பொருட்களின் எண்ணிக்கை 514,000) | 43.52 (கொள்வனவு செய்யப்பட்ட வெடி பொருட்களின் எண்ணிக்கை 514,000) |

| | | |
|---|---|---|
| கஜமிதுரோ நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் (மனிதர்களுக்கும் காட்டு யானைகளுக்குமிடையேயான சச்சரவுகளைக் குறைத்தல்) | 300 | 802.62 |

மேற்படி விடயங்களுக்கமைய, யானைகளைப் பாதுகாத்தல் எனும் பிரதான பணிக்குகான நடவடிக்கைகளை முகாமைத்தும் மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டது.

(I) பூங்காவைப் பார்வையிட வரும் வயதுக்கு வந்த வெளிநாட்டவர்களிடம் 15 டொலர்களும் வெளிநாட்டுச் சிறார்களிடம் 08 டொலர்களும் உள்ளூர் வயதுக்கு வந்தோரிடம் ரூபா 60, உள்ளூர் சிறார்களிடம் ரூபா 30 என பொது 172 பற்றுச்சீட்டு பயன்படுத்தப்பட்டு அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. Z/27 490,001 புத்தகம் பரீசீலிக்கப்பட்டபோது பற்றுச்சீட்டு வழங்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளில் நூற்றுக்கு 99 சதவீதம் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளாகக் காணப்பட்டனர். இதற்கமைய, பொது 172 பற்றுச்சீட்டுக்களின் அலுவலகப் பிரதிகளில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளது கட்டணம் அறவிடப்பட்டதாக மாற்றஞ்செய்யப்படுவதன் மூலம் மோசடி செய்யப்பட்ட வாய்ப்புண்டு என அவதானிக்கப்பட்டது. இவ்வாறான சாதகமற்ற நிலைமையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் இனங்காணப்பட்டபோதும், அதனைத் திருத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை.

## 3.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அங்கம்மெடில்ல தேசிய பூங்காவில் யானைக்கான தரிப்பிடம் மற்றும் யானைகள் வெளியேறுவதற்கான மேடை என்பனவற்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 4,574,919 செலவழிக்கப்பட்டபோதும், அக்கட்டிடங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) திம்பிரியமங்கட சுற்றுலா விடுதிகளைப் பார்ப்பதற்கு ரூபா 564,055 செலவழிக்கப்பட்டபோதும், சுற்றுலா விடுதியின் ஒரு பகுதி நீரில் மூழ்கியதால் தங்குமிட வசதி இல்லாது போயிற்று செலவழிக்கப்பட்ட ரூபா 564,055 விரயமாகியதுடன் இச் சுற்றுலா விடுதிக்குப் பெருமளவு கோரிக்கை இருந்தும் 2 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்ததால் திணைக்களம் அறவிடக்கூடியதாகவிருந்த பெருமளவு வருமானத்தை அது இழந்திருந்தது.

## 4. கணக்களி தகைமையும் சிறந்த ஆளுமையும்

### 4.1 கூட்டினைந்த திட்டம்

நிறுவனத்தின் தொலைநோக்கையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு 3 ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

நிதியத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின்போது ஒரு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டபோதும், உள்ளக்கக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமும் கணக்காய்வு அறிக்கைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டபோதும், 2012 ஆகஸ்ட் 12 ஆந் திகதியன்று முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த பதவியணியில் கணக்காய்வுக்கு உதவியளிக்கும் பதவியணியினரை அங்கீகரிக்கவோ அல்லது திணைக்களத்தின் நோக்கெல்லையுடன் அனுசரனையாக அமையுமாறு போதியளவு பதவியணியினரைக் குறித்த கூறில் பணியமர்த்தவோ இல்லை.

### 4.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டின்போது நிதியம் ரூபா 164,174,438 க்கான கொள்வனவுகளை மேற்கொண்டது. எனினும், 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாாரிக்கப்படவில்லை.

## 4.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றல்

பின்வருவன அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஹக்கல தீவிர இயற்கைப் பாதுகாப்புப் பிரதேசத்தில் நுவரேலியா மாவட்டத்திற்குரிய இடங்களில் 116 அத்து மீறிய குடியேற்றமும் பதுளை மாவட்டத்திற்குரிய இடங்களில் 103 அத்துமீறிய குடியேற்றமும் அறிவிக்கப்பட்டிருந்தன. சுற்றாடலுக்கு அனுசரணையாக உள்ள இப் பாதுகாப்புப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றத்தால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கொன்றிற்கமைய தீவிர பாதுகாப்புப் பிரதேசங்களில் அத்து மீறிய குடியேற்றங்களைத் தடைசெய்தல், அத்துமீறிய குடியேற்ற வாசிகளை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி அவர்களை அகற்றுதல், ஹக்கல தீவிர பாதுகாப்புப் பிரதேசத்தின் எல்லைகளைக் குறிப்பீடு செய்தல், அத்து மீறிய குடியேற்ற வாசிகளுக்கு மின்சாரம் வழங்காது விடல், தீவிர பாதுகாப்புப் பிரதேசங்களில் அத்து மீறிக் குடியேறுவர்களுக்குத் தொடர்ந்தும் பயிர்செய்கைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், கால நீடிப்பு வழங்குதல், புதுப்பித்தல் என்பவற்றைச் செய்யாதிருத்தல் போன்ற கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு வன விலங்குப் பாதுகாப்புப் பணிப்பாளரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) நுரேலியா – அம்பேவெல வீதியில் விலங்கினப் பண்ணையிலிருந்து ஆரம்பமாகும் ஹக்கல தீவிர பாதுகாப்புப் பிரதேசத்தில் அடங்கும் ஏறக்குறைய 2 கிலோ மீட்டர் தூரம் அம்பேவெல விலங்கினப் பண்ணையால் அத்துமீறிப் பயன்படுத்தப்படுவது சம்பந்தமாகத் திணைக்களப் பணிப்பாளர் இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

(ஈ) ஸ்ரீ தலா மாளிகைக்கு ‘‘சிந்து’’ மற்றும் ராஜு’’ எனும் இரு சிறு யானைகள் வழங்கப்பட்டமை சட்டத்திற்குப் புறம்பானது என்பது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று விசாரிக்கப்பட்டு வருகின்றபோதும், இச் சிறு யானைகள் இரண்டையும் பதிவு செய்து அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) வனவிலங்குகள் மற்றும் விருட்சங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (469 ஆம் அத்தியாயம்) 3 மற்றும் 4(3)(அ) பிரிவு மற்றும் 2009 ஆம் ஆண்டின் 22

ஆம் இலக்க வனவிலங்குகள் மற்றும் விருட்சங்கள் பாதுகாப்பு (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 6.2(2) பிரிவின் பிரகாரம் ''தேசிய பாதுகாப்புப் பிரதேசம் ஒன்றினது எல்லையிலிருந்து ஒரு மைலுக்குள் எவரேனும் சுற்றுலா ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப்பதற்கோ அல்லது சுற்றுலா ஹோட்டல் ஒன்றினால் வழங்கப்படும் சேவைகள் அல்லது வசதிகளுக்குச் சமமான ஏதேனும் சேவைகளையோ வசதிகளையோ வழங்கலாது'' எனும் பிரிவுக்கு முரணாக உடவளவை தேசிய பூங்கா வலயத்தினுள் அடங்கும் இடத்தில் விடுமுறை விடுதி ஒன்றிற்கு அங்கீகாரம் கோரப்பட்டு, பின்னர் அதன் பெயர் சுற்றாடலுக்கு உகந்த தியான நிலையம் என மாற்றஞ் செய்யப்பட்டு பணிப்பாளர் நாயகத்தால் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வன விலங்குப் பூங்கா வருமானம்
(இ) தண்டப் பணச் சேகரிப்பும் மிகையூதியக் கொடுப்பனவும்
(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்
(உ) ஆவணங்களைப் பேணுதல்
(ஊ) உள்ளகக் கணக்காய்வு